# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 10 வியாழக்கிழமை 25.12.2025 கதிர் 419



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
Yarl Muttram
Youtube Channel






## திருமலையில் பஸ் விபத்து! 14 பேர் வைத்தியசாலையில்!!

திருகோணமலை, டிச. 25

திருகோணமலை, சேருநுவர பொலிஸ் பிரிவில் உள்ள மஹிந்தபுர சந்தியில் வைத்து பஸ் விபத்துக்குள்ளானதில் 14 பேர் காயமடைந்துள்ளனர்.

திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதியில் இன்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அக்கரைப்பற்றில் இருந்து திருகோணமலைக்கு பயணிகளை ஏற்றிச் சென்ற தனியார் பஸ்ஸே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் காயமடைந்தவர்கள் மூதூர் தள வைத்தியசாலை மற்றும் சேருநுவர பிரதேச வைத்தியசாலையிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சேருநுவர பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# மீண்டும் கொழும்பில் மஹிந்த!

## பின்னணி என்ன?



கொழும்பு, டிச. 25

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் கொழும்பில் குடியேறியுள்ளார் என்று தெரியவருகின்றது.

நுகேகொடை, மிரியான பகுதியிலேயே அவர் குடியேறியுள்ளார் என்று கூறப்படுகின்றது.

அரசியல் நடவடிக்கை, இராஜதந்திர சந்திப்புகள் மற்றும் மருத்துவ சிகிச்சை என்பவற்றைக் கருதியே மஹிந்த மீண்டும் கொழும்பு வந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுகின்றது.

கொழும்பு, 7 விஜேராம மாவத்தையிலுள்ள அரசின் உத்தியோகபூர்வ வதிவிடத்திலேயே மஹிந்த தங்கி வந்தார்.

7

## பணத்தை சேமிக்கும் பேராசையால் அழிந்த இலங்கை அரசியல்வாதிகளை கடுமையாக விமர்சித்த பேராயர்



மேசைக்கு அடியால் பணத்தை வாங்கிக்கொண்டு இயற்கைக்கு மாறான செயற்பாடுகளுக்கு அனுமதியளித்த அரசியல்வாதிகள் செய்த தவறே மண்சரவுகள் மற்றும் வெள்ள பெருக்கு ஏற்பட காரணமாகும் என பேராயர் மெல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

நத்தார் பண்டிகையின் தேசிய நிகழ்வு இன்று உஸ்வட்ட கெய்யாவ தேவாலயத்தில் நடைபெற்றது. அங்கு நடைபெற்ற ஆராதனையில்

7

## நாளை 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்துங்கள்


சுனாமி மற்றும் பிற பேரிடர்களால் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் வகையில், நாளை (26) காலை 9:25 மணி முதல் காலை 9:27 மணி வரை இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துமாறு மக்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

மேலும், 2025ஆம் ஆண்டு தேசிய பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு, காலியில் உள்ள பெரலிய சுனாமி நினைவுச் சின்னத்தில் நாளை காலை 8.30 மணி முதல் காலை 11.00 மணி வரை முக்கிய நிகழ்வு நடைபெறும் என்று பேரிடர் மேலாண்மை மையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, டித்வா சூறாவளியால்

7

## கண்டியில் மண்சரிவு அபாயத்தால் 5 கிராமங்களுக்குப் பூட்டு!



கண்டி, டிச. 25

டித்வா சூறாவளியால் ஏற்பட்ட கடும் மழையைத் தொடர்ந்து, கண்டி மாவட்டத்தின் ஹசலக்க நகரை ஒட்டியுள்ள பமுனுபுர பிரதேசத்தின் ஐந்து கிராமங்களை அரசு உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் ஆள் நடமாட்டமற்ற வலயங்களாக அறிவித்துள்ளது.

மண்சரிவு காரணமாக இந்தப் பகுதிகளில் நிலம் சுமார் 40 அடி ஆழம் வரை உள்வாங்கியுள்ளதால், மனிதக் குடியேற்றங்களுக்கு இவை பாதுகாப்பற்றவை எனக்கருதப்பட்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று கண்டி மாவட்ட அனர்த்த முகாமைத்துவக் குழுவின் உதவிப் பணிப்பாளர் எல்.ஏ.கே. ரணவீர தெரிவித்தார்.

7



# சுற்றுலாப் பயணிகளின் வருகை 22.5 லட்சத்தைத் தாண்டியது

கொழும்பு, டிசெ.25

இவ்வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் இலங்கைக்கு வருகை தந்த வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 2,250,000 ஐக் கடந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஜனவரி முதலாம் திகதி முதல் டிசம்பர் 21ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 2,258,202 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர்.

இவ்வாறு வருகை தந்தவர்களில் அதிகமானோர் இந்தியப் பிரஜைகளாவர்.

அதன்படி, இந்தியாவில் இருந்து 510,133 பேரும், பிரித்தானியாவில் இருந்து 204,703 பேரும்,ஜேர்மனியில் இருந்து 141,941 பேரும் மற்றும் சீனாவில் இருந்து 129,403 பேரும் வருகை தந்துள்ளனர்.

இவர்களுக்கு மேலதிகமாக பிரான்ஸ், அவுஸ்திரேலியா மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளிலிருந்தும் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

அதேவேளை, டிசம்பர் மாதத்தின் முதல் 21 நாட்களில் மட்டும் 154,609 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மேலும் குறிப்பிட்டுள்ளது. (ஞ)

# சுற்றாடல் சட்டங்களை மீறும் நபர்களுக்கு எதிராக கடுமையான சட்டம் நடைமுறை!

கொழும்பு, டிசெ.25

சுற்றாடல் சட்டங்களை மீறும் நபர்களுக்கு எதிராகச்சட்டம்கடுமையாகநடைமுறைப்படுத்தப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், உதவி பொலிஸ் அத்தியட்சகருமான எஃப்.யூ. வுட்லர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் கருத்து வெளியிடுகையில்,

கடந்த சில நாட்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது, சுற்றாடல் சட்டங்களை மீறிய குற்றச்சாட்டில் 23 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

அத்துடன், எதிர்காலத்தில் நாடு முழுவதும் இவ்வாறான சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் மேலும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் வீதியோர வியாபார நடவடிக்கையை கட்டுப்படுத்த மாநகர சபை நடவடிக்கை



வவுனியாவில் வீதியோர வியாபாரங்களை அகற்றும் செயற்பாட்டினை வவுனியா மாநகரசபை நேற்று முன்னெடுத்திருந்தது.

நத்தார் பண்டிகை மற்றும் புத்தாண்டுவியாபாரம்வவுனியாவில் களை கட்டியுள்ள நிலையில் வர்த்தக நிலையங்களிற்கு முன்பாக நடைபாதையை தடை செய்யும் முகமாக கொட்டகை அமைத்து வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன், வீதியோரங்களிலும் பொதுமக்களிற்கு இடையூறு ஏற்படும் வகையில் அங்காடி வியாபார நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன் காரணமாக பொதுமக்கள் பெரும் சிரமத்திற்குள்ளாகி வருவதுடன், விபத்துக்களும் ஏற்படும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு மாநகர சபையினரால் நடைபாதை மற்றும் வீதியோரங்களை ஆக்கிரமித்து வியாபார நடவடிக்கைகள் மேற்கொண்டு வரும் கொட்டகைகள் மற்றும் பொருட்களை அகற்றும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. மாநகர ஆணையாளரின் உத்தரவுக்கமைய வருமானவரி பரிசோதகர்கள், பொதுசுகாதார பரிசோதகர்கள், உட்பட உத்தியோகத்தர்கள் இச் செயற்பாட்டை முன்னெடுத்திருந்தனர். (ஐ)



# குழந்தைகள் பாதுகாப்புத் துறைகளுக்கு குழந்தை நட்பு போக்குவரத்து முறை!

மாகாண நன்னடத்தை மற்றும் குழந்தைகள் பாதுகாப்புத் துறைகளுக்கு குழந்தை போக்குவரத்துக்கான ஒரு பிரத்யேக அமைப்பை நிறுவுவதில் அரசாங்கம் சிறப்பு கவனம் செலுத்தியுள்ளதாக மகளிர் மற்றும் குழந்தைகள் விவகார அமைச்சர் சரோஜா சாவித்ரி பால்ராஜ் தெரிவித்துள்ளார்.

“சிறைச்சாலை வாகனங்களில் கொண்டு செல்லப்படும் போது, சிறைச்சாலை போக்குவரத்து என்று குறிக்கப்பட்ட பேருந்துகளில் குழந்தைகள் கொண்டு செல்லப்படுவது, வயது வந்த குற்றவாளிகளுடன் பயணிப்பது, சில சந்தர்ப்பங்களில், பாதிக்கப்பட்டவர்கள் குற்றவாளிகள் என்று கூறப்படும் அதே வாகனத்தில் கொண்டு செல்லப்படுவது உள்ளிட்ட சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். இந்த சூழ்நிலைகள் நீதிச் செயல்பாட்டில் இரண்டாம் நிலை பழிவாங்கலுக்கு வழிவகுத்துள்ளன,” என்று அவர் கூறினார்.

அடிப்படை உரிமைகள் வழக்கு ளு.ஊ. (குஃசு) 335ஃ2010 இன் போது உச்ச நீதிமன்றம் அத்தகைய அமைப்பின் அவசியத்தையும் எடுத்துரைத்துள்ளதாக அமைச்சர் பால்ராஜ் சுட்டிக்காட்டினார்.

முதல் கட்டமாக, ஐந்து நவீன டொயோட்டா வேன்கள் தெற்கு, சபரகமுவ, மேற்கு, வடமேற்கு மற்றும் வடக்கு மாகாணங்களின் மாகாண சபைகளுக்கு ஒப்படைக்கப்பட்டதாக அமைச்சர் கூறினார்.

அரசாங்கத்தின் “ஒரு வளமான நாடு – ஒரு அழகான வாழ்க்கை” என்ற கொள்கை அறிக்கையின்படி, “ஒரு பாதுகாப்பான குழந்தைப் பருவம், ஒரு ஆக்கப்பூர்வமான எதிர்கால தலைமுறை” என்ற கருப்பொருளின் கீழ், மாகாண மட்டத்தில் குழந்தை போக்குவரத்துக்கான வாகனங்களை வாங்குவதற்கு நடப்பு பட்ஜெட்டில் ரூ. 250 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். அதன்படி, ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒன்று என ஒன்பது வாகனங்கள் நேற்று ஒப்படைக்கப்பட்டன.




அரசு நிறுவனங்களில் புதிய ஆட்சேர்ப்பு நிறுத்தப்பட்ட போதிலும், இந்த அமைப்பு திறம்பட செயல்படுவதை உறுதி செய்வதற்காக, மாகாண மட்டத்தில் 54 புதிய பதவிகள் உருவாக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாகாணமும் ஆறு அதிகாரிகளைப் பெறுவார்கள்: இரண்டு ஓட்டுநர்கள், இரண்டு பராமரிப்பாளர்கள் மற்றும் இரண்டு பாதுகாப்பு அதிகாரிகள்.

ஆட்சேர்ப்பு ஏற்கனவே நடைபெற்று வருவதாகவும், இந்த ஊழியர்கள் நியமிக்கப்பட்ட உடனேயே அவர்களுக்கு சிறப்பு பயிற்சி அளிப்பதிலும் அமைச்சகம் கவனம் செலுத்தியுள்ளது என்றும் அமைச்சர் கூறினார். புதிய போக்குவரத்து அமைப்பின் முன்னேற்றம் மதிப்பாய்வு செய்யப்பட்டு மேலும் வலுப்படுத்தப்படும்.

பெண்கள் மற்றும் குழந்தைகள் விவகார அமைச்சர், வரும் ஆண்டில் சமூக குறிகாட்டிகளை மேம்படுத்துவதற்காக, பொருளாதார குறிகாட்டிகளில் முன்னேற்றங்களுடன், பெண்கள் மற்றும் குழந்தைகள் விவகாரத் துறையில் அதிகபட்ச தலையீடு செய்யப்படும் என்று வலியுறுத்தினார்.

பத்தரமுல்லையில் உள்ள அமைச்சக வளாகத்தில், மாகாண நன்னடத்தை மற்றும் குழந்தைகள் பாதுகாப்புத் துறைகளுக்கு குழந்தை போக்குவரத்துக்கான வாகனங்களை ஒப்படைப்பதற்காக நேற்று (24) நடைபெற்ற அதிகாரப்பூர்வ விழாவில் அவர் இந்தக் கருத்துக்களை தெரிவித்தார்.

மேலும் நீதிமன்றத்தின் முன் ஆஜராகும் பாதிக்கப்பட்டவர்கள், சந்தேக நபர்கள் அல்லது குற்றவாளிகள் என அழைக்கப்படும் குழந்தைகள் தற்காலிகமாக பாதுகாப்பான வீடுகள் அல்லது தடுப்பு மையங்களில் ஒரு முடிவு எடுக்கப்படும் வரை வைக்கப்படுகிறார்கள் என்றும், அத்தகைய குழந்தைகளை கொண்டு செல்வது பெரும்பாலும் சிறைச்சாலைத் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும், இது கடுமையான கவலைகளுக்கு வழிவகுக்கிறது என்றும் அவர் விளக்கினார்.

இந்தக் கவலைகளைக் கருத்தில் கொண்டு, அர்ப்பணிப்புள்ள குழந்தைகளுக்கு ஏற்ற போக்குவரத்து அமைப்பை நிறுவுவதில் அரசாங்கம் சிறப்பு கவனம் செலுத்தியுள்ளது என்று அமைச்சர் பவுல்ரல் கூறினார். (ஐ)

## மஹிந்த பத்திரனவுக்கு எதிராக வழக்கு 1000 கோடி ரூபா நட்டஈடு கோரி பிரதி அமைச்சர் வழக்கு!



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் செயற்பாட்டாளரான மஹிந்த பத்திரனவுக்கு எதிராக, பொது மக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல, கடுவலை மாவட்ட நீதிமன்றத்தில் அவதூறு வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

தனது நற்பெயருக்குக் களங்கம் விளைவித்ததாகக் கூறி, இதற்காக 1000 கோடி ரூபா (10 பில்லியன்) நட்டஈடு வழங்குமாறு பிரதி அமைச்சர் இந்த வழக்கின் மூலம் கோரியுள்ளார்.

கடந்த செப்டம்பர் மாதம் மஹிந்த பத்திரன தனது பேஸ்புக் பக்கத்தில் வெளியிட்ட பதிவு ஒன்றே இந்த சட்ட நடவடிக்கைக்குக் காரணமாகும்.

அந்தப் பதிவில், கொழும்பு சினமன் லைஃப் சொகுசு குடியிருப்பு வளாகத்தில் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல ஒரு சொகுசு அடுக்குமாடி குடியிருப்பை வாங்கியுள்ளார்.

இந்தச் சொத்து வாங்குவதற்கான நிதி ஆதாரம் சந்தேகத்திற்குரியது என்றும், இது கையூட்டு மூலம் பெறப்பட்ட பணமாக இருக்கலாம் என்றும் அவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டுகள் முற்றிலும் பொய்யானவை மற்றும் அடிப்படை ஆதாரமற்றவை என சுனில் வட்டகல நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

தனது அரசியல் வாழ்க்கையையும் தனிப்பட்ட கௌரவத்தையும் சீர்குலைக்கும் நோக்கில் திட்டமிட்டே இந்தப் பொய்ப் பிரசாரம் செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சச்சின் ரத்வத்த என்ற பெயரிலான ஒரு பேஸ்புக் கணக்கை மேற்கோள் காட்டியே மஹிந்த பத்திரன இந்தப் பதிவை இட்டுள்ளார். அந்தக் கணக்கின் நம்பகத்தன்மையும் தற்போது கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக ஏற்கனவே மஹிந்த பத்திரனவுக்கு கோரிக்கை கடிதம் அனுப்பப்பட்டதாகவும், ஆனால் அதற்கு அவர் எவ்வித பதிலும் வழங்கவில்லை என்றும் பிரதி அமைச்சர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## வவுனியா பொலிஸாரால் நத்தார் குடில் திறந்து வைப்பு!



வவுனியா பொலீஸ் தலைமையகத்தினால் இன்று நத்தார் குடில் திறந்து வைக்கப்பட்டது.

நத்தார் பண்டிகையை ஒட்டி வவுனியா பொலீஸ் தலைமையகத்தில் வவுனியா அந்தோனியார் ஆலயத்தின் பங்குத்தந்தை கிறிஸ்தோபர் அந்தோனிதாஸ் டலிமாவினால் நத்தார் பாலகன் குடிலில் வைக்கப்பட்டு நத்தார் ஆராதனைகள் இடம்பெற்று நத்தார் கொண்டாட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டிருந்தது.

வவுனியா சமுதாய பொலீஸின் ஏற்பாட்டில் கிராமிய சமுதாய பொலீஸ் அங்கத்தவர்களின் பங்குபற்றுதலோடு ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் உதவி பொலீஸ் அத்தியட்சகர் என்.எம்.திசாநாயக, வவுனியா பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரஜீத் சுரங்க வீரத்தன உட்பட சமுதாய போலீஸ் பொறுப்பதிகாரி மற்றும் சிவில் பாதுகாப்பு குழு முக்கியஸ்தர்களின் பங்கு பெற்றலோடு இந்த நிகழ்வு இடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## திருகோணமலை விவசாயிகளுக்கு 1,001 மில்லியன் ரூபா நஷ்ட ஈடு



டித்வா சூறாவளி மற்றும் அதனால் ஏற்பட்ட கடும் வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட திருகோணமலை மாவட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்கும் பணிகள் நேற்று (24) வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட விவசாய திணைக் காலம் தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தின் இந்த துரித நடவடிக்கையின் மூலம் பல்லாயிரக்கணக்கான விவசாய குடும்பங்கள் நன்மையடைந்துள்ளன. திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த 7,515 விவசாயிகள் இந்தத் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட ஒவ்வொரு விவசாயிக்கும் ஹெக்டேர் ஒன்றுக்கு150,000 ரூபா வீதம் வழங்கப்பட்டது.

இதற்காக அரசாங்கம்1,001 ரூபாவை ஒதுக்கி, அதனை நேற்றைய தினத்திற்குள் வழங்கி முடித்துள்ளது.

இந்த நிதி விநியோகம் குறித்து கருத்துத் தெரிவித்த அதிகாரிகள், இது வெறும் நஷ்டஈடு மாத்திரமல்ல எனத் தெரிவித்தனர். சூறாவளியினால் வாழ்வாதாரத்தை இழந்த விவசாயிகள், எவ்வித சுணக்கமுமின்றி மீண்டும் பயிற்சிகை நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான ஒரு ஊட்டிப்பாகவும் இது வழங்கப்பட்டுள்ளதாக அவர்கள் குறிப்பிட்டனர்.

திடீர் வெள்ளத்தினால் பெரும் நஷ்டத்தை எதிர்நோக்கியிருந்த நிலையில், அடுத்த சில நாட்களுக்குள்ளேயே அரசாங்கம் இந்த நிதியை நேரடியாக விவசாயிகளின் வங்கிச் கணக்குகளுக்கு வைப்புச் செய்தமை குறித்து மாவட்ட விவசாயிகள் தமது நன்றிகளைத் தெரிவித்துள்ளனர்.

இதன் மூலம் பெரும் கடன் சுமையிலிருந்து தப்பித்துள்ளதாகவும், உடனடியாக விதைப்பணிகளைத் தொடங்க முடியும் எனவும் அவர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். (ஐ)

# மறதியால் ஸ்டாலின் பேசியிருக்கலாம்: 'அடிமை' பேச்சுக்கு விஜய் பதிலடி



'தமிழகத்தில் அடிமையாக இருந்து, தாமரை மலருக்கு தரிசனம் செய்து, இருந்த இடத்தை மறைக்க முடியாமல், மனதில் இருந்ததை ஒருவித மறதியால் முதல்வர் ஸ்டாலின் பேசி இருக்கலாம்' என த.வெ.க., தலைவர் விஜய் கூறியுள்ளார்.

முதல்வரே பழைய அடிமை, புதிய அடிமை என பூடகமாக பேசி, யார் மீதோ கல்லெறிவதாக எண்ணி களிப்புறுகிறார்.

பாவம் அவர் தங்கள் வீட்டு நிலைக்கண்ணாடி முன்புதான் நின்று பேசுகிறோம் என்பதை மறந்து விட்டார்.

குறைந்தபட்ச செயல் திட்டம் என்றெல்லாம் மக்களை குழப்பி, 1999 முதல் 2003 வரை அடிமையாக இருந்து, தமிழகத்தில் தாமரை மலருக்கு தரிசனம் செய்து, இருந்த இடத்தை மறைக்க முடியாமல், மனதில் இருந்ததை ஒருவித மறதியால் பேசி இருக்கலாம். காரணம் எதுவாகினும் கொண்டையை மறைக்க இயலாமல், குட்டு வெளிப்பட்டு விட்டது.

வழியெங்கும் வாஞ்சையுடன் நின்று வரவேற்கும் மக்கள், நமக்கு ஓட்டளிப்பர் என்பதை எண்ணி, இப்போதே குமைச்சல் அடைகின்றனர். இனி அவர்களின் ஏசுதலையும், ஏகடியம் பேசுவதையும் புறந்தள்ளி, மக்களுடன் மக்களாக இணைந்து களமாடுவதில், த.வெ.க.,வினர் கவனமாக இருக்க வேண்டும்.

அரசியல் மற்றும் கொள்கை எதிரிகளின் நரி தந்திர சூழ்ச்சிகளை, ஆழமாக புரிந்து, மக்களுடன் மக்களாக களத்தில் விழிப்புடன் இருக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. (ஐ)

# கண்ணை மூடி மோடிக்கு ஆதரவு எடப்பாடிக்கு பதவி ஆசை: சண்முகம் அட்டாக்

நூறு நாள் வேலை உறுதித் திட்டத்தை சீர்குலைக்கும் சட்டத்தை ஒன்றிய அரசு திரும்ப பெறக்கோரி மதுரை, முனிச்சாலை பகுதியில் திமுக கூட்டணி கட்சிகள் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நேற்று நடைபெற்றது. இதில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் பெ.சண்முகம் பேசியதாவது: 100 நாள் வேலை திட்டத்தை ஒரேடியாக திட்டத்தை ஒழித்துகட்டும் விதமாக கடந்த, 18ம் தேதி நாடாளுமன்றத்தில் 'விபி ஜி ராம் ஜி' என்ற பெயரில் புதிய சட்டத்தை இயற்றியுள்ளனர்.

தமிழகம், கேரளா போன்ற பாஜ ஆட்சியில் இல்லாத மாநிலங்களில் பல்வேறு திட்டங்களுக்கான நிதியை வழங்காமல் பாரபட்சமாக ஒன்றிய அரசு நடந்து வருகிறது. இதற்கு, அதிமுக ஆதரவு தெரிவிக்கிறது. எடப்பாடிக்கு பதவி ஆசை மட்டும் தான் கண்ணுக்கு தெரிகிறது. உழைப்பாளி மக்களுக்கு எதிராக, தமிழக மக்களுக்கு எதிராக எதை செய்தாலும் அதை கண்ணை மூடிக் கொண்டு எடப்பாடி ஆதரித்து வருகிறார். கறை நல்லது என, ஒரு விளம்பரத்தில் வருவதைபோல் மோடி அரசு எதை செய்தாலும் நல்லது என எடப்பாடி ஆதரவு தெரிவித்து வருகிறார். இவ்வாறு பேசினார். (ஐ)

# பாஜ கூட்டணியில் 6 சீட்டா? டிடிவி பரபரப்பு பதில்



தேனி மாவட்டம், ஆண்டிபட்டி வைகை அணை சாலையில் உள்ள எம்ஜிஆர் சிலைக்கு அமமுக பொதுச்செயலாளர் டிடிவி.தினகரன் நேற்று மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: எந்த கூட்டணிக்கு செல்ல வேண்டும் என்பதை முடிவு செய்ய வேண்டியது அமமுக. அமமுகவை முக்கிய கட்சிகள் கூட்டணிக்கு அழைத்தது உண்மை. தை பிறந்ததும் ஜெயலலிதா பிறந்தநாள் முடிந்தப் பிறகு கூட்டணி முடிவுகளை அறிவிப்போம்.

வரும் தேர்தலில் அமமுக வெற்றி பெற்று சட்டமன்றத்திற்கு செல்வது உறுதி. நாங்கள் எந்த கூட்டணியில் இருந்தாலும், ஆண்டிபட்டியில் அமமுகதான் போட்டியிட்டு வெற்றி பெறும். யார் போட்டியிடுகிறார் என்பதை முடிவு செய்யவில்லை. உடனே நீங்கள் போட்டியிடுகிறீர்களா என்று கேட்டு விடாதீர்கள். வேட்பாளர் யார் என்பதை பிறகு அறிவிப்போம். தேர்தல் கூட்டணியில் எங்களை ஏற்றுக் கொள்பவர்களை விட, நாங்கள் யாரை ஏற்றுக் கொள்கிறோம் என்பதே முக்கியம்.

பிள்ளையார்பட்டி கோயிலுக்கு சென்றபோது, ஊடகத்துறை நண்பர்கள் சிலர், 'உங்களுக்கு கூட்டணியில் 6 சீட் கொடுத்துள்ளார்களா?' என்று கேட்டனர். அது வதந்தி, அதை நம்ப வேண்டாம் என்று நான் அன்றே சொன்னேன். ஆனால் வதந்திகளை தகவல் என்ற பெயரில், செய்தியாக்கும் போது வருத்தமாக இருக்கிறது. வதந்திகளை நம்ப வேண்டாம் இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஐ)

# பெண் சினிமா கலைஞரை பலாத்காரம் செய்ய முயன்ற மலையாள இயக்குனர் கைது

மலையாள சினிமாவில் பழம்பெரும் டைரக்டர்களில் ஒருவர் குஞ்சு முகம்மது. சமீபத்தில் முடிவடைந்த கேரள சர்வதேச திரைப்பட விழா சினிமா தேர்வுக் கமிட்டி தலைவராக நியமிக்கப்பட்டிருந்தார். இந்தநிலையில் கடந்த மாதம் திரைப்பட விழாவுக்கு சினிமாக்களை தேர்ந்தெடுக்கும் கூட்டம் நடைபெற்றது. கூட்டம் முடிந்த பின்னர் குஞ்சு முகம்மது, கமிட்டி உறுப்பினர்கள் திருவனந்தபுரத்தில் உள்ள ஒரு ஓட்டலில் தங்கியிருந்தனர். அப்போது பெண் சினிமா கலைஞர் தங்கியிருந்த அறைக்கு சென்ற டைரக்டர் குஞ்சு முகம்மது, அவரிடம் தகாத முறையில் நடந்து கொள்ள முயற்சித்ததாக கூறப்படுகிறது.

இதுகுறித்து அவர் கேரள முதல்வர் பினராயி விஜயனிடம் புகார் செய்தார். இதைத்தொடர்ந்து குஞ்சு முகம்மது திருவனந்தபுரம் போலீசில் விசாரணைக்கு ஆஜரானார். அவரை போலீசார் கைது செய்து ஜாமீனில் விடுவித்தனர். (ஐ)



# கோவையில் மட்டும் 3,117 வாக்குச்சாவடிகள் காத்து வாங்குகிறது: பூத் ஏஜென்ட்டை கூட நியமிக்க முடியாமல் தள்ளாடும் தவெக

கோவை மாவட்டத்தில் வரைவு வாக்காளர் பட்டியல் கடந்த 19ம் தேதி வெளியிடப்பட்டது. இந்த பட்டியல் வெளியிடும் முன் அரசியல் கட்சியினர் ஆலோசனை பெறப்பட்டது. இதில், திமுக, அதிமுக உள்பட 12 அரசியல் கட்சிகளை சேர்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டனர். பின்னர், சிறப்பு முகாம் மற்றும் இறந்தவர்கள் பெயர் நீக்கம் தொடர்பாக நடந்த ஆய்வு கூட்டத்திலும் திமுக, அதிமுக உள்பட 12 அரசியல் கட்சிகளை சேர்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

ஆனால், கோவை மாவட்டத்தில் நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக்கழகம் எந்த கூட்டத்திலும் பங்கேற்கவில்லை. குறிப்பாக, பூத் லெவல் ஏஜென்ட் 1, பூத் லெவல் ஏஜென்ட் 2 பட்டியலில் தமிழக வெற்றிக்கழகம் கட்சியின் பெயர் இடம்பெறவில்லை. மாவட்டத்தில் 3117 ஓட்டு சாவடிகள் இருக்கிறது. இந்த ஓட்டு சாவடிகளுக்கு தமிழக வெற்றிக்கழகத்தின் பூத் ஏஜென்ட்கள் நியமனம் செய்யப்படாமல் இருப்பதாக தெரிகிறது.

மாவட்ட நிர்வாகிகள், எந்த ஓட்டு சாவடிக்கும் பூத் கமிட்டி அமைக்கவில்லை. வாக்காளர் பட்டியல் பெயர் சேர்க்க மக்களுடன் இறங்கி களத்தில் வேலை செய்யவில்லை. வாக்காளர் பெயர் நீக்கம் தொடர்பான புகார்களையும் கண்டு கொள்ளவில்லை என கூறப்படுகிறது.

திமுக மற்றும் அதிமுக கட்சியினர் 3117 ஓட்டு சாவடிகளுக்கும், காங்கிரஸ் 2271 ஓட்டு சாவடிக்கும், பாஜ 2851 ஓட்டு சாவடிக்கு, மா.கம்யூ., 751 ஓட்டு சாவடிக்கும், தேமுதிக 797 ஓட்டு சாவடிக்கும், நாம் தமிழர் கட்சி 106 ஓட்டு சாவடிக்கும் ஏஜென்ட் பட்டியல் தந்து ஏஜென்ட் கூட்டத்தில் பங்கேற்றனர். இப்படி இருந்தால் நாங்கள் எப்படி அவர்களை அழைப்பது என தேர்தல் பிரிவு அதிகாரிகள் சலிப்படைந்துள்ளனர். (ஐ)




# ஆக்கம் தரும் அறிவியல் வளர்ச்சி


அறிவியல்.... இந்த ஒற்றை வார்த்தையில் தான் உலகமே அடங்கியிருக்கிறது. நமது அன்றாட நடவடிக்கைகள், ஒவ்வொன்றிலும் அறிவியல் மறைந்திருக்கிறது.

தமிழகத்தை சேர்ந்த சி.வி.ராமன், “ராமன் விளைவு” என்ற ஒளி சிதறல் நிகழ்வை 1928 பிப்., 28ம் தேதி கண்டுபிடித்தார். “நீர், காற்று போன்ற தடையற்ற ஊடகத்தில் ஒளி ஊடுறுவும் போது, சிதறல் அடைந்து, அலை நீளம் மாறுகிறது. அதிகமாக சிதறல் அடையும் நீல நிறம் தண்ணீரில் தோன்றுகிறது” என்பதை கண்டுபிடித்தார்.

இந்த நாளே இந்தியாவில் தேசிய அறிவியல் தினமாக கொண்டாடப்படுகிறது. மாணவர்களிடம் அறிவியல் ஆர்வத்தை ஏற்படுத்துவதே இதன் நோக்கம். இருளை விரட்டிய மின்விளக்கு, தூரத்தில் இருந்தாலும் உரையாட தொலைபேசி, என்ன வேலைகளையும் செய்வதற்கு கம்ப்யூட்டர், மரங்களில் நிழல்களை தங்கிய மனிதனுக்கு உயர்ந்து நிற்கும் வானளாவிய கட்டடங்கள்....

எங்கு வேண்டுமானாலும் செல்ல விரும்பிய மனிதன் கடலுக்கு நடுவே கூட பாலங்களை அமைத்தது காலால் நடந்த மனிதன் கால்மணி நேரத்தில் வேறு நாட்டிற்கே (வாகனங்கள்) செல்கிறான். வெள்ளத்தில் இருந்த பாதுகாத்துக் கொள்ள அணைகள், மேலே இருந்து






தகவல்களை தருவதற்கு சாட்டிலைட், அறிவியல் ரீதியாக சந்ததியை கண்டு பிடிக்க மரபணு....

இலை தழைகளை உடுத்திய மனிதன் தற்போது பலவண்ணாங்களில் வடிவங்களில் ஆடைகளை உடுத்துகிறான். பச்சை காய்கறிகளையும், பச்சை மாமிசங்களையும் சாப்பிட்ட மனிதன் தற்போதுஉணவை தேர்வு செய்ய நீண்ட பட்டியலை பார்க்கிறான். இதற்கு காரணம் அறிவியல் தான். எந்த ஒரு அறிவியல் கண்டுபிடிப்பிலும் நன்மை, தீமை சேர்ந்தே இருக்கும். அதற்காக அறிவியல் கண்டுபிடிப்புகளுக்கு தடை விதிக்கக் கூடாது. அறிவியலை ஆக்கப்பூர்வ விஷயங்களுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். ஒரு காலத்தில் “அணுகுண்டால்” உருக்குலைந்த ஜப்பான், இன்று அதே அணுசக்தியால் முன்னேற்றம் கண்டுள்ளது.


இதற்கு காரணம் அந்நாட்டின் விஞ்ஞானிகள். நமது நாட்டிலும் மாணவர்கள் வெறும் புத்தக அறிவோடு நின்று கொள்வது தடுத்து நிறுத்தப்பட வேண்டும். அவர்கள் ஆராய்ச்சிகளில் ஈடுபடுத்த அரசு முயற்சிக்க வேண்டும். அறிவியல் ஆர்வத்தை பள்ளி மாணவர்களிடம் இருந்து ஏற்படுத்த வேண்டும். இதற்கு அறிவியல் பாடப்புத்தகத்தில் தியரியுடன், செய்முறைப்பயிற்சியையும் இணைக்க வேண்டும். செய்முறைக்குத் தேவையான அறிவியல் ஆய்வு உபகரணங்கள் அனைத்து பள்ளி மற்றும் கல்லூரிகளில் இருப்பதை அரசு உறுதி செய்ய வேண்டும்.

# போரை முடிவுக்கு கொண்டு வருவதில் அமெரிக்கா- உக்ரைன் ஒருமித்த கருத்து: அதிபர் ஜெலன்ஸ்கி தகவல்



உக்ரைன் –ரஷ்யா இடையே கடந்த 4 ஆண்டுகளாக போர் நீடித்து வருகின்றது. போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கு அதிபர் டிரம்ப் சமீபத்தில் ஒரு விரிவான 20 அம்ச சமாதான திட்ட முன்மொழிவை வெளியிட்டுள்ளார். இந்த வரைவு முன்மொழிவு உக்ரைனிடம் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டது. இது தொடர்பாக புளோரிடாவில் நடைபெற்ற நீண்ட பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு இந்த முன்மொழிவு ரஷ்யாவிடமும் நேற்று வழங்கப்பட்டது. இது குறித்து அதிபர் ஜெலன்ஸ்கி கூறுகையில், "போரை முடிவுக்கு கொண்டு வரும் பல முக்கிய பிரச்னைகளில் அமெரிக்காவும், உக்ரைனும் ஒருமித்த கருத்தை எட்டியுள்ளன. ஆனால் உக்ரைனின் கிழக்கு பகுதியில் உள்ள தொழில்துறை மையமான டோன்பாஸ் பிராந்தியத்தின் மீதான கட்டுப்பாடு மற்றும் சபோரிஜியா அணுமின் நிலையத்தின் மேலாண்மை தொடர்பான சிக்கலான பிரச்னை தீர்க்கப்படாமல் உள்ளது" என்றார். (ஐ)





## காதலனுடன் வீனஸ் வில்லியம்ஸ் 2வது முறையாக திருமணம்

அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல டென்னிஸ் வீராங்கனை வீனஸ் வில்லியம்ஸ். முன்னாள் நம்பர் 1 வீராங்கனையான 45 வயதான இவர் 7 கிராண்ட் ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளார். இவர் இத்தாலியைச் சேர்ந்த நடிகரும், மாடலிங்கும், தயாரிப்பாளருமான ஆண்ட்ரியா பிரெட்டி என்பவரை காதலித்து வந்தார். இவருக்கு 37 வயதுதான் ஆகிறது. பேஷன் ஷோவில் இருவருக்கும் பழக்கம் ஏற்பட்டு காதலித்து வந்தார்.

கடந்த ஜனவரி 31ம்தேதி நிச்சயதார்த்தம் செய்துகொண்டனர். கடந்த செப்டம்பரில் இத்தாலியின் இஸ்கியா தீவில் ஏற்கனவே திருமணம் செய்துகொண்டனர். இந்நிலையில் அமெரிக்காவின் ப்ளோரிடாவின் பாம் பீச்சில் இந்த ஜோடி 2வது முறையாக திருமணம் செய்துகொண்டனர்.

5 நாட்கள் நடைபெற்ற இந்த திருமண நிகழ்ச்சியில் வீனஸ் வில்லியம்சின் தங்கையான செரீனா வில்லியம்ஸ் மற்றும் இருவரின் குடும்பத்தினர், நண்பர்கள் கலந்துகொண்டனர். திருமண விழாவில் செரீனா பாட்டு பாடி மகிழ்வித்தார். 45 வயதை தாண்டியும் டென்னிசில் ஓய்வு பெறாத வீனஸ், அடுத்த மாதம் நியூசிலாந்தின் ஆக்லாந்தில் தொடங்கும் தொடரில் விளையாட திட்டமிட்டுள்ளார். (ஐ)

## 13 ஆண்டுகளாக நடந்த கொடூரங்கள் அம்பலம் மனைவிக்கு போதை மருந்து கொடுத்து நண்பர்களுடன் சேர்ந்து பலாத்காரம்:



லண்டன்: இங்கிலாந்தில் தனது மனைவிக்கு போதை மருந்து கொடுத்து 13 ஆண்டுகளாக நண்பர்களுடன் சேர்ந்து பாலியல் வன்கொடுமை செய்த முன்னாள் கவுன்சிலர் கைது செய்யப்பட்டுள்ளார். இங்கிலாந்தின் ஸ்விண்டன் பகுதியைச்சேர்ந்த கன்சர்வேடிவ் கட்சியின் முன்னாள் கவுன்சிலர் பிலிப் யங் (49). இவர் கடந்த 2007ம் ஆண்டு முதல் 2010ம் ஆண்டு வரை கவுன்சிலராக பதவி வகித்துள்ளார். இதனிடையே தனது மனைவி ஜோன் யங் (48) என்பவருக்கு உணவு மற்றும் பானங்களில் போதை மருந்து கலந்து கொடுத்து, அவர் மயக்கத்தில் இருக்கும்போது பாலியல் வன்கொடுமை செய்துள்ளார்.

கடந்த 2010ம் ஆண்டு முதல் 2023ம் ஆண்டு வரை சுமார் 13 ஆண்டுகளாக தனது நண்பர்களுடன் சேர்ந்து இந்த கொடுமையை செய்துள்ளார். பாதிக்கப்பட்ட பெண் தனது அடையாளத்தை மறைக்க விரும்பாமல் தாமாக முன்வந்து அளித்த புகாரின் பேரில், பிலிப் யங் மீது கற்பழிப்பு, ஆபாச படம் எடுத்தல், சிறார்களின் ஆபாச படங்கள் வைத்திருத்தல் என மொத்தம் 56 குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்த பாதக செயலுக்கு உடந்தையாக இருந்து அப்பெண்ணை சீரழித்ததாக நார்மன் மேக்சோனி, டீன் ஹாமில்டன், ரிச்சர்ட் வில்கின்ஸ், கானர் சாண்டர்சன் மற்றும் முகமது ஹாசன் ஆகிய 5 பேர் மீதும் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஸ்விண்டன் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தப்பட்ட பிலிப் யங் போலீஸ் காவலில் வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். வரும் 2026ம் ஆண்டு ஜனவரி 23ம் தேதி இவ்வழக்கு மீண்டும் விசாரணைக்கு வரவுள்ள நிலையில், உலகையே உலுக்கிய பிரான்ஸ் நாட்டின் பெலிகோட் வழக்கை போன்று இச்சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)


## எப்ஸ்டீன் வழக்கில் 30,000 பக்க ஆவணம் வெளியீடு அதிபர் டிரம்ப் மீது பாலியல் குற்றச்சாட்டு:



அமெரிக்காவில் ஜெப்பிரி எப்ஸ்டீன் பாலியல் வழக்கில் வெளியிடப்பட்ட புதிய ஆவணங்களில் டிரம்ப் மீதான பாலியல் குற்றச்சாட்டுகள் இடம்பெற்றுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்காவில் சிறுமிகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்த வழக்கில் சிக்கிய கோடீஸ்வரர் ஜெப்பிரி எப்ஸ்டீன், சிறையில் இருந்தபோதே தற்கொலை செய்து கொண்டார். இது தொடர்பான விசாரணை ஆவணங்களை நீதிமன்ற உத்தரவின்படி அமெரிக்க நீதித்துறை வெளியிட்டு வருகிறது. இந்நிலையில், தற்போது 3வது கட்டமாக சுமார் 30,000 பக்கங்கள் கொண்ட ஆவணங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதில் இங்கிலாந்து இளவரசர் ஆண்ட்ரூ 'தி இன்விசிபிள் மேன்' என்ற பெயரில் எப்ஸ்டீனின் உதவியாளர் கிஸ்லைன் மேக்ஸ்வெல்லுக்கு மின்னஞ்சல் அனுப்பியது மற்றும் எப்ஸ்டீன் எழுதியதாகக் கூறப்படும் போலி கடிதங்கள் குறித்த விபரங்கள் இடம்பெற்றுள்ளன.

இதற்கிடையே, கடந்த 2020ம் ஆண்டு அதிபர் தேர்தலுக்கு ஒரு வாரத்திற்கு முன்பு எப்ஃபிஐ அமைப்புக்கு வந்த புகார் ஒன்று தற்போது வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அதில், '1990ம் ஆண்டுகளில் டிரம்பும் (தற்போதைய அதிபர்), எப்ஸ்டீனும் சேர்ந்து எனது முன்னாள் காதலியை பாலியல் வன்கொடுமை செய்தனர்' என்று லிமோசின் கார் ஓட்டுநர் ஒருவர் கூறியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் 1993ம் ஆண்டு முதல் 1996ம் ஆண்டு வரை டிரம்ப் 8 முறை எப்ஸ்டீனின் தனி விமானத்தில் பயணம் செய்ததற்கான குறிப்புகளும் இந்த ஆவணத்தில் உள்ளன. இருப்பினும், 'இந்த குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை மற்றும் பொய்யானவை' என்று அமெரிக்க நீதித்துறை விளக்கம் அளித்துள்ளது. இதுகுறித்து டிரம்ப் தரப்பில், 'இது ஜனநாயகக் கட்சியினர் நடத்தும் நாடகம்' என்று மறுப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## நடிகை குத்திக் கொலை: காதலன் வெறிச்செயல்



அமெரிக்காவில் பிரபல நாடக நடிகையை அவரது காதலரே கத்தியால் குத்திக் கொலை செய்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்காவின் நியூஜெர்சி மாகாணத்தில் சமீபகாலமாகப் பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறை சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. கடந்த நவம்பர் மாதம் வுட்பிரிட்ஜ் பகுதியில் பாலியல் குற்றவாளி ஒருவர் தனது கூட்டாளியை கத்தியால் குத்திக் கொன்ற சம்பவம் நடந்திருந்தது. இந்நிலையில், டிஸ்னியின் புகழ்பெற்ற 'தி லயன் கிங்' நாடகத்தில் நடித்துப் பிரபலமான நடிகை இமானி ஸ்மித் (26), மிடில்செக்ஸ் கவுண்டி பகுதியில் வசித்து வந்தார்.

இவருக்கும் இவருடைய காதலருக்கும் இடையே ஏற்பட்ட தகராறு முற்றியதில், ஆத்திரமடைந்த காதலன் வீட்டில் இருந்த இமானி ஸ்மித்தை சரமாரியாகக் கத்தியால் குத்திக் கொலை செய்துள்ளார். இச்சம்பவம் குறித்து நேற்று வழக்குப்பதிவு செய்த போலீசார், கொலையாளி மீது கொலைக் குற்றம் சுமத்தி அவரைக் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர். இது தொடர்பான விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. (ஐ)

## கண்டியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உதத்தாவ, நெலும் மல, கல நக, மெத கெலே மற்றும் உட கல் தெபொக்காவ ஆகிய கிராமங்களே இவ்வாறு தடைசெய்யப்பட்ட வலயங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

இதில் உதத்தாவ கிராமத்தில் மாத்திரம் 12 இற்கும் மேற்பட்ட வீடுகள் மண்ணோடு மண்ணாகப் புதையுண்டுள்ளதுடன், இதுவரை 26 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

எனினும், பெருமளவிலான உடல்கள் 30 முதல் 40 அடி ஆழத்தில் சிக்கியிருக்கலாம் என நம்பப்படுவதால், காணாமல்போனவர்களின் எண்ணிக்கையைத் துல்லியமாக உறுதிப்படுத்த முடியவில்லை என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தற்போது நிலவும் பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக மீட்புப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இதற்கிடையில், தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ஆசிரி கருணாவர்தன கருத்துத் தெரிவிக்கையில், அதிக அபாயம் உள்ளதாகக் கண்டறியப்பட்ட இந்தப் பகுதிகளில் மீண்டும் மக்கள் குடியேற அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும், அவர்கள் பாதுகாப்பான இடங்களில் மீள்குடியேற்றப்படுவார்கள் என்றும் குறிப்பிட்டார்.

தற்போது 3 டி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி எதிர்கால மண்சரிவு அபாயங்களை மதிப்பிடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியர் ரங்கிகா ஹல்வதுர தலைமையிலான குழுவினர் யஹங்கல மலைப்பகுதியில் நடத்திய ஆய்வில், சட்டவிரோத புதையல் வேட்டைக்காக அங்கு இரசாயனங்கள் பயன்படுத்தப்பட்டதும், பாறைகள் துளையிடப்பட்டதும் கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகளால் ஏற்பட்ட பலத்த அதிர்வலைகள் மலையின் கட்டமைப்பைப் பலவீனப்படுத்தியதே இந்தப் பாரிய மண்சரிவுக்கு முக்கிய காரணமாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

இது தொடர்பான விரிவான அறிக்கை மினிப்பே பிரதேச செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## மீண்டும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எனினும், முன்னாள் ஜனாதிபதிகளுக்குரிய சிறப்புரிமைகளை நீக்கும் சட்டம் நீக்கப்பட்ட பின்னர் அங்கிருந்து மஹிந்த வெளியேறினார்.

தங்காலையில் உள்ள தமது பூர்வீக இல்லமான கால்டன் இல்லத்துக்கு மஹிந்த சென்றிருந்தார்.

மக்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் நாளாந்தம் அவரைச் சந்திக்க வருவது தொடர்பான செய்திகளை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி வெளியிட்டு வந்தது.

இந்நிலையிலேயே அவர் கொழும்பு வந்துள்ளார். நுகேகொடை - மரியான பகுதியிலேயே கோட்டாபய ராஜபக்ஷ, சமல் ராஜபக்ஷ ஆகியோரின் வீடுகளும் அமைந்துள்ளன.

## பணத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பேராயர் மெல்கம் ரஞ்சித் உரையாற்றும் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்துரையாற்றிய அவர்,

அரசியல் வாதிகள் பணத்தை பெற்றுக் கொண்டு காடழிப்பு சதுப்பு நிலங்களை நிரப்புதல், மலைகளில் கட்டிடங்கள் அமைப்பதற்கு அனுமதி அளித்தல் போன்ற பாரியளவில் சுற்றுச் சூழலை நாசப்படுத்த உதவி செய்தனர். அத்தோடு அவற்றுக்கு பக்கப்பலமாகவும் இருந்துள்ளனர்.

நாட்டில் ஏற்பட்ட பேரிடரில் இன்னும் மக்கள் பல கஷ்டங்களை அனுபவிக்கின்றனர். ஏன் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. சிலர் தனது சுயநலத்திற்காக சுற்றுச் சூழலை முழுமையாக நாசப்படுத்தியதாலாகும்.

எவ்வித ஒழுக்கமும் அற்ற நிலையில் குப்பை கூளங்களை வீதியில் வீசி, முழு நாட்டையும் அசுத்தமாக்கியது யார். நாங்களே இவற்றை செய்தோம். இதற்கு அரசியல்வாதிகளும் பக்க பலமாக இருந்து செயற்பட்டுள்ளனர்.

அது மட்டுமல்ல, பணத்தை சேமிக்க துடிக்கும் பேராசைகளால் இந்த நிலைமை ஏற்பட்டது. ஆனால் நாம் மரணிக்கும்போது இவற்றை கொண்டு செல்லப்போவதில்லை என்று குறிப்பிட்டிருந்தார்.

## நாளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆசீர்வாதம் வேண்டி மாவட்ட அளவில் மதங்களுக்கு இடையேயான நிகழ்ச்சிகளும் இதன்போது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

2004 ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி பேரலையால் இலங்கை உட்பட முழு உலகமும் பாதிக்கப்பட்டிருந்ததுடன், ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நானுஓயா – பதுளை இடையிலான ரயில் சேவை அடுத்த இரு மாதங்களில்!



நானுஓயா மற்றும் பதுளை இடையிலான ரயில் சேவை இன்னும் இரண்டு மாதங்களில் ஆரம்பிக்கப்படும் என போக்குவரத்து பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.

ரயில் சேவைகளை மீள ஆரம்பிப்பது குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அதிதீவிர வானிலையால் ஏற்பட்ட அனர்த்தங்களால் சேதமடைந்த ரயில் தண்டவாளங்கள் கட்டம் கட்டமாக புனரமைக்கப்பட்டு வருவதாகவும் பிரதி அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதற்கமைய, சேதமடைந்த ரயில் பாலங்களைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது வடக்கு மற்றும் கிழக்கு மார்க்கத்துக்கான ரயில் சேவைகள் முழுமையாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அனர்த்தங்களால் மலையகத்துக்கான ரயில் சேவைகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இருப்பினும், தொடர்ச்சியான புனரமைப்பு பணிகளுக்கு மத்தியில் பதுளை மற்றும் அம்பேவல வரையான ரயில் சேவைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.

# முல்லையில் காணியற்றோருக்கு விரைவில் காணிகள் வழங்கப்படவேண்டும் – ரவிகரன் எம்பி!

முல்லைத்தீவு மாவட்டத்தில் 3,389பேருக்கு குடியிருப்பதற்கு காணிகள் இல்லையெனத் தெரிவித்த வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், காணியற்றோருக்கு விரைவில் காணிகளை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார்.

முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நேற்று (24) இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் 3,389பேருக்கு காணிகள் இல்லை. எனவே காணி அற்றவர்களுக்கு காணிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

குறிப்பாக புதுக்குடியிருப்பில் 1500குடும்பங்களுக்கு காணிகள் இல்லை. இந்நிலையில் கூடியவிரைவில் புதுக்குடியிருப்பு பிரதேசசெயலகப்பிரிவிற்குட்பட்ட காணியற்றோருக்கு காணிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென பிரதேசசெயலாளரால் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை மாந்தை கிழக்கு, துணுக்காய், ஒட்டுசுட்டான் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களிலும் காணியற்றோருக்கு காணிகளை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டுமென வலியுறுத்தியிருந்தேன்.

அதற்கமைய துணுக்காய் மாந்தை, ஒட்டுசுட்டான் பிரதேசசெயலர் பிரிவுகளிலுள்ள காணியற்ற குடும்பங்களுக்கு காணிகளை வழங்குவதற்கு விரைவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமெனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை கரைதுறைப்பற்று பிரதேசத்திலும் 700இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் காணிகளின்றி இருப்பதாக பிரதேசசெயலகத் தரவுகளின் மூலம் அறியக்கூடியதாகவிருக்கின்றது.

எனவே காணிகளுக்காக விண்ணப்பித்துள்ள எமது மக்களுக்கு விரைவில் காணிகளை வழங்குவதற்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமெனத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இவ்வாறு காணிகளற்ற குடும்பங்களுக்கு காணிகளை வழங்கத்தவறினால், காணிகளற்ற மக்களுடன் இணைந்து பிரதேசசெயலகங்களை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளவேண்டிருக்கும். எனவே விரைவாக குடியிருப்பதற்கு காணிகள் இல்லாத குடும்பங்களுக்கு விரைவில் காணிகளை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் - என்றார்.

இந்நிலையில் கரைதுறைப்பற்று பிரதேசசெயலர் இதன்போது பதிலளிக்கையில்,

காணியற்ற குடும்பங்களுக்கு காணிகளை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

அதற்கமைய அவ்வாறு காணியற்றோருக்கு வழங்கப்படவேண்டிய காணிகள் இனங்காணப்பட்டுள்ளதுடன், அக்காணிகள் அளவீடுசெய்யப்பட்டு வழங்குவதற்கு ஏற்றவகையில் தயார்நிலையிலும் உள்ளன.

எனவே காணியற்றவர்களுடைய பட்டியலை ஆராய்ந்து, எதிர்வரும் மார்ச் மாதத்திற்கு முன்னர் காணிக்கச்சேரி நடாத்தப்படும் எனத் தெரிவித்தார்.

# திட்டமிட்டு புறக்கணிக்கப்படும் வடமராட்சி கிழக்கு மக்கள்–தவிசாளர் யுகதீஸ் குற்றச்சாட்டு!




யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு மக்கள் திட்டமிட்டு புறக்கணிக்கப்படுகிறார்கள் என்று பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் யுகதீஸ் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

அதிகளவான இடங்களில் ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நடைபெற்று வருகின்ற போதிலும் நீண்ட காலமாக வடமராட்சி கிழக்கு பகுதியில் மட்டும் ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நடைபெறவில்லை

வடமராட்சி கிழக்கு ஒருங்கிணைப்பு குழு தலைவராக இருக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர் ரஜீவன் எம்பி தன்னுடைய முகநூலில் கடந்த 23ஆம் திகதி ஒருங்கிணைப்பு குழு கூட்டம் இடம் பெறுவதாக தெரிவித்திருந்தார்

ஆனால் ஒருங்கிணைப்பு குழு கூட்டம் பிற்போட பட்டிருப்பதாக அதே முகநூலில் அறிவித்திருந்தார்

இது தொடர்பாக பிரதேச செயலாளர் உட்பட அதிகாரிகள் பலர் அறிந்திருக்கவில்லை.

அதன் பின்புதான் முகநூலில் டிசிசி மீட்டிங் திகதி மாற்றப்பட்டிருப்பதாக ரஜீவன் எம்பி தெரிவித்திருந்தார்.

மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டம் இடம் பெறுவதற்கு முன்பு பிரதேச செயலக அபிவிருத்தி குழு கூட்டம் இடம்பெற வேண்டும்

அவ்வாறு இடம்பெற்றால்தான் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் நாம் தீர்க்கப்படாத பிரச்சினைகள் தொடர்பில் கலந்து ஆலோசிக்க முடியும்

நீண்ட காலமாக வடமராட்சி கிழக்கு அபிவிருத்தி குழு கூட்டம் இடம்பெறாமை கவலையளிக்கின்றது. வடமராட்சி கிழக்கு மக்களின் தீர்க்கப்படாத பிரச்சினைகள் பல்வேறு காணப்படுகின்றன

இவர்கள் திட்டமிட்டு எங்களுடைய வடமராட்சி கிழக்கு பிரதேசத்தை புறக்கணிக்கிறார்கள் என்று எண்ணத் தோன்றுகிறது. வருகின்ற ஆண்டு பல காப்பெட் வீதிகள் யாழ் மாவட்டத்தின் பல பிரதேச செயலகங்களுக்கு ஒதுக்கப்பட்ட போதும் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்திற்கு உட்பட்டு எந்த ஒரு காப்பெட் வீதியும் ஒதுக்கப்படவில்லை

வடமராட்சி கிழக்கில் பல்வேறு பிரச்சனைகள் காணப்படுகின்ற போதும் இவ்வாறு அபிவிருத்தி குழு கூட்டங்களை நடத்தாது விடுவது திட்டமிட்டு எங்களுடைய மக்களை புறக்கணிக்கும் ஒரு செயற்பாடாகும்.

எதிர்காலத்தில் இந்த தவறுகளை இவர்கள் கவனத்தில் கொண்டு மக்களுடைய பிரச்சினைகளை தீர்ப்பதற்காக இவ்வாறான ஒருங்கிணைப்பு குழு கூட்டங்களை நிச்சயம் நடத்த வேண்டும் என அவர் தெரிவித்தார்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.12.2025 வெளியிடப்பெற்றது.